People's Watch
No.32, Besant Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org
A Network Towards Human Rights Monitoring, Intervention, Campaign, Research and Documentation
(A Programme Unit of the Centre for Promotion of Social Concerns)

28.11.2023

**கோவை, துடியலூர், அரசுப் பள்ளியில் படிக்கும் சிறுமியின் மீது வெறுப்புணர்வோடு நடந்து தாக்குதல் நடத்திய பயிற்சி ஆசிரியையை விசாரணைக்கு உட்படுத்துக. பயிற்சி ஆசிரியை மீது நடவடிக்கை எடுக்காத வகுப்பு ஆசிரியர், தலைமை ஆசிரியர், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆகியோரை பணியிடைநீக்கம் செய்க !**

## பத்திரிகைச் செய்தி

மக்கள் கண்காணிப்பகம் சார்பில், சட்டக் கல்லூரி பயிற்சி மாணவர்கள் பங்கேற்ப்பில், நடத்தப்பட்ட கள ஆய்வில், பாதிக்கப்பட்டோர், பாதிப்பை ஏற்படுத்தியோர், சம்பவ சாட்சிகள், மற்றும் சம்பவம் தொடர்பான அரசு அலுவலர்களைச் சந்தித்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையிலும், பெறப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும் வெளியிடப்படும் பத்திரிகைச் செய்தியாகும்.

கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூர், அசோகபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில், ஏழாம் வகுப்பு பயின்று வரும், இஸ்லாமிய சிறுமியிடம், அப்பள்ளியில் பயிற்சி ஆசிரியையாக பணியாற்ற வந்த ஆசிரியை அபிநயா என்பவர், வகுப்பறையில் சக மாணவிகள் முன்னிலையில், உன் தந்தை என்ன வேலை செய்கிறார் என்று கேட்டுள்ளார். அதற்கு, சிறுமி தன் அப்பா மாட்டு இறைச்சிக் கடை வைத்துள்ளதாக தெரிவித்துள்ளார். இதனைத் தெரிந்து கொண்ட பயிற்சி ஆசிரியர் அபிநயா, ஏழாம் வகுப்பு படிக்கும் இஸ்லாமிய சிறுமி வீட்டுப்பாடம் எழுதி வராத நாட்களில் சிறுமியின் மீது வெறுப்புணர்வோடு நடந்து கொண்டுள்ளார். தொடர்ந்து கடுமையான முறையில் குழந்தைகள் உரிமை மீறலில் ஈடுபட்டுள்ளார். மேலும் வகுப்பாசிரியர் ராஜ்குமார் என்பவரும் சிறுமியை இழிவுபடுத்தி திட்டியுள்ளார்.

இந்துஸ்தான் கல்வியியல் கல்லூரியில், கல்வியியல் (B.Ed) இரண்டாம் ஆண்டு படித்துவரும் அபிநயா என்பவர் கடந்த செப்டம்பர் 8 ஆம் தேதி அன்று துடியலூர், அசோகா நகர், அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிற்சி ஆசிரியராக சேர்ந்து ஏழாம் வகுப்பு குழந்தைகளுக்கு கணக்கு பாடம் கற்றுத்

தந்துள்ளார். இந்நிலையில் கடந்த தீபாவளி விடுமுறைக்கு முன்பு ஏழாம் வகுப்பு படிக்கும் இஸ்லாமிய சிறுமி வீட்டுப்பாடம் செய்து வராததால் கோபமடைந்த பயிற்சி ஆசிரியை அபிநயா, இஸ்லாமிய சிறுமியின் தந்தை செய்து வரும் தொழில் ஏற்கனவே தெரிந்ததனால், **“மாட்டுக்கறியை சாப்பிட்டு திமிரா ஆடுறியாடி”** என தனது பாகுபாட்டை வெளிப்படுத்தி வெறுப்புணர்வோடு திட்டியுள்ளார். அப்போது ஏழாம் வகுப்பு படிக்கும் சிறுமி ஏன் எனது பெற்றோரை பற்றியும் அவர்களின் தொழிலை பற்றியும் பேசுகிறீர்கள்? எனக் கேட்டுள்ளார். இதனால் மேலும் கோபமடைந்த பயிற்சி ஆசிரியை அபிநயா, சிறுமியின் கன்னத்தில் அடித்துள்ளார். இதனை அறிந்த வகுப்பு ஆசிரியர் ராஜ்குமார் என்பவரும் சிறுமியை இழிவுபடுத்திப் பேசியுள்ளார். இதனால் பயந்து, மன உளைச்சலுக்கு ஆளான ஏழாம் வகுப்பு படிக்கும் இஸ்லாமிய சிறுமி பள்ளிக்குச் செல்வதை நிறுத்திவிட்டார்.

சிறுமி பள்ளிக்குச் செல்ல மறுத்ததை அறிந்த பெற்றோர், நவம்பர் 14 ஆம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் பள்ளிக்குச் சென்று தலைமை ஆசிரியை இராஜேஸ்வரியிடம் முறையிட்டுள்ளனர். ஆனால் தலைமை ஆசிரியர் இராஜேஸ்வரி பயிற்சி ஆசிரியை அபிநயா மற்றும் வகுப்பு ஆசிரியர் ராஜ்குமார் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க முன்வராமல் துடியலூர் ஊராட்சியின் 10 ஆவது வார்டு உறுப்பினர் நடராஜன் மற்றும் துடியலூர் காவல் நிலைய போலீசார் திலீபா மூலம் மற்றொரு போலீஸ் ஒருவரை வரவழைத்து மாணவியின் பெற்றோரை பள்ளியிலிருந்து வெளியேற்றியுள்ளார். இதனால் மாணவியின் பெற்றோர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு. பாலமுரளி அவர்களிடம் 21.11.2023 அன்று புகார் கொடுத்துள்ளனர். ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் பயிற்சி ஆசிரியை அபிநயாவை இனிமேல் பள்ளிக்கு வரவேண்டாம் என 17.11.2023 வாய்மொழியாக தலைமை ஆசிரியை இராஜேஸ்வரி தெரிவித்துள்ளார். குடும்பச் சூழல், பெற்றோர் குறித்து வகுப்பறையில் பயிற்சி ஆசிரியை கேள்வி எழுப்பியதாலும், வகுப்பு ஆசிரியர் இழிவுபடுத்தியதாலும் மன உளைச்சலுக்கு உள்ளான ஏழாம் வகுப்பு படிக்கும் இஸ்லாமிய சிறுமி பயந்த நிலையில் பள்ளிக்கு வருவதை நிறுத்திக்கொண்டார்.

கல்வி நிலைய வளாகங்களில் மதரீதியான அச்சுறுத்தல் சமீப காலமாக அதிகரித்து வருகிறது. குறிப்பாக குழந்தைகளுக்கான கல்வி பல்வேறு சமூக காரணங்களால் தடுத்து நிறுத்தப்படும் சூழல் நமது சமூகத்திற்கு அபாயகரமானதாகும். பள்ளியில் படிக்கும் குழந்தைகளின் உணவு, உரிமை

குறித்து கேள்வி எழுப்புவது குழந்தைகள் உரிமை மீறலாகும். இதுபோன்ற சூழல் பள்ளிகளில் வளர்ந்துவிடக்கூடாது. எனவே குழந்தைகளுக்கு எதிரான உரிமை மீறலில் ஈடுபட்ட பயிற்சி ஆசிரியை அபிநயா என்பவரை விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். பயிற்சி ஆசிரியை அபிநயா மற்றும் வகுப்பு ஆசிரியர் ராம்குமார் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்காத தலைமை ஆசிரியை இராஜேஸ்வரி மற்றும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பாலமுரளி ஆகியோரை இடைநீக்கம் செய்யவேண்டும். ஏழாம் வகுப்பு படிக்கும் இஸ்லாமிய சிறுமியின் மீது நடந்த உரிமை மீறல் சம்பவம் குறித்து மாவட்ட அளவில் உள்ள குழந்தைகள் நலக்குழு (CWC) மாவட்ட குழந்தைகள் நல அலுவலர் (DCPO) ஆகியவற்றில் செயல்பாடுகள் குறித்து தமிழக அரசு அறிக்கை கேட்கவேண்டும். பாதிக்கப்பட்ட ஏழாம் வகுப்பு படிக்கும் இஸ்லாமிய சிறுமி பாதுகாப்பாக பள்ளிக்கு சென்று கல்வியினை தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கண்காணிப்பகம் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,



(ஹென்றி திபேன்)
நிர்வாக இயக்குநர்
மக்கள் கண்காணிப்பகம்

மேலும் விவரங்களுக்கு: 99943 68571 – 99943 68524